2010 நவம்பர் 11]

அந்தந்தப் பகுதிகளிலே நாற்றங்கால் அமைத்து அரசாலே உருவாக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களில், புதியதாக உருவாக்கப்பட்ட அரியலூர், திருப்பூர் ஆகிய 2 மாவட்டங்களைத் தவிர 30 மாவட்டங்களில் வன விரிவாக்க மையங்கள் இருக்கின்றன. அங்கே மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உங்கள் தொகுதிக்கு அருகிலேகூட தம்மம்பட்டி, கல்ராயன், ஆத்தூர், வாழப்பாடி, ஏத்தாபூர் போன்ற பகுதிகளிலே நாற்றங்கால் அமைக்கப்பட்டு அங்கே தேவையான மரக்கன்றுகள் நடப்படுகின்றன.

2008-2009-ல் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 3,40,000 மரக்கன்றுகளும், 2009-2010-ல் 15,000 மரக்கன்றுகளும், 2010-2011-ல் 15,000 மரக்கன்றுகளும் ஆக 3,70,000 மரக்கன்றுகள் உங்கள் தொகுதியில் நடப்பட்டிருக்கின்றன. தனியார் காடுகளில் மரம் வளர்ப்பு என்று பார்த்தால் உங்கள் தொகுதியைப் பொறுத்த அளவில் 2007-2008-ல் 50,000 மரக்கன்றுகளும், 2008-2009-ல் 24,980 மரக்கன்றுகளும், 2009-2010-ல் 80,500 மரக்கன்றுகளும், 2010-2011-ல் 97,500 மரக்கன்றுகளும், ஆக மொத்தம் 2,52,980 மரக்கன்றுகள் 849.95 ஏக்கர் நிலப்பரப்பிலே நடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

28—

வட்டச் சாலை

***57024-திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதியில் மதுரை, சங்கரன்கோவில், செங்கோட்டை, சேரன்மகாதேவி சாலைகளை இணைத்து வட்டச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 நவம்பர் 11

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

திருநெல்வேலி தொகுதியில் மேற்குப்புறமாக வட்டச் சாலை அமைக்கும் பணி தச்சநல்லூர் பகுதியில் வலதுபுறமாகத் திரும்பி தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் மீண்டும் இணையும்வகையில் மேற்குப்புறமாக வட்டச் சாலை அமைக்க விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பணி நடைபெற்று வருகின்றது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பிறகு புறவழிச் சாலை அமைப்பதற்கான பணியை அரசு தொடங்கும்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாநகரத்திற்குள் மேற்கு நோக்கிச் செல்கின்ற வாகனங்கள் அனைத்தும் அந்த மாநகரத்திற்குள்ளாகவே வந்து செல்கின்ற காரணத்தினால், போக்குவரத்து நெருக்கடி என்பது அதிகமாக ஏற்பட்டிருக்கின்றது. எனவே, மதுரை ரோடு, ராஜபாளையம் ரோடு, செங்கோட்டை ரோடு, அடுத்து அம்பை போன்ற சாலைகளை இணைத்து ஒரு புறவழிச் சாலை அமைத்தால், மேற்கு நோக்கிச் செல்கின்ற வாகனங்கள் அனைத்தும் அந்தச் சாலையின் வழியாகச் சென்று விடும். எனவே, போக்குவரத்து நெருக்கடி நெல்லை மாநகரத்திற்குள் குறையும் என்கிற காரணத்தினால், இந்தச் சாலைகளை இணைப்பதற்கு அரசு முன்வருமா என்பதோடு, இந்தச் சாலைகளை இணைப்பதற்கு ஒருவழிப் பாதை இருக்கிறது. அதை இரு வழிப் பாதையாக மாற்றினாலே அந்தச் சுற்று வட்டச் சாலை உருவாகிவிடும். எனவே, விரைந்து நம்முடைய அரசு இந்த ஆண்டிற்குள்ளாக இந்தச் சாலையை ஏற்படுத்தித் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2010 நவம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன். புறவழிச் சாலை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பகுதியினுடைய போக்குவரத்து நெரிசலை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அதேபோல, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், வணக்கத்திற்குரிய மேயர் போன்றவர்களும் எங்களிடத்திலே நாங்கள் ஆய்வுக் கூட்டத்திற்கு திருநெல்வேலிக்குச் சென்றபொழுது குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அதையொட்டித்தான் புறவழிச் சாலை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு அரசு செயல்பட்டு வருகிறது. எனவே, ஏற்கெனவே இருக்கக்கூடிய சாலைகளை விரிவுபடுத்தினாலே புறவழிச் சாலையாக அமையும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் அதற்குரிய ஆய்வுப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை செய்து வருகிறது. எனவே, முழு விவர அறிக்கை வந்தவுடன் திட்டப் பணியைத் துவங்குவதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29 மற்றும் 30 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]